بسم الله الرحمن الرحيم

**ஜாமிஆ நளீமிய்யாவின் அனைத்து மாணவர்களுக்குமான**

# விஷேட அறிவித்தல்

السلام عليكم ورحمة الله وبركاته

நாட்டில் நிலவும் கொரோனா விவகாரத்தின் நிமித்தம் ஜாமிஆ நளீமியா விடுமுறைக்காக தற்போது மூடப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால், மாணவர்கள் வீட்டிலிருந்தே தமது பாடநெறிகளைத் தொடர வேண்டும் என்று நிர்வாகம் தீர்மானித்திருக்கிறது. இது தொடர்பில் இன்று இடம்பெற்ற விரிவுரையாளர்களுக்கான கூட்டத்தில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் பெறப்பட்டிருக்கின்றன:-

1. 2020-2021 ஆண்டுக்கான முதல் தவணை (First Semester) இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 20ஆம் திகதி (20.11.2020) வரை தொடரும்.

2. Zoom மூலமாக அனைத்து பாடங்களுக்குமான விரிவுரைகளும் இடம்பெறும்.

3. தினமும் நான்கு பாடங்களுக்கான விரிவுரைகள் இடம்பெறுவதுடன் அவை எட்டு மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 11.40 வரை தொடரும்.

4. அனைத்து மாணவர்களும் விரிவுரை களுக்கு கட்டாயமாக சமூகமளிக்க வேண்டும். அவர்களது பரீட்சைகளின் போது வரவுகள் கவனமாகக் கணிக்கப்படும்.

5. விரிவுரைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து நிமிடங்களுக்கு முன்னரே மாணவர்கள் சமூகமளித்திருக்க வேண்டும். மேலும் கூடிய கரிசனையோடும் அவதானத்துடனும் மாணவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்வதோடு தேவையான குறிப்புகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

6. மாணவர்களுக்குத் தேவையான குறிப்புகள் LMS அல்லது Zoom மூலமாக பாட விரிவுரையாளர்களால் அவ்வப்போது வழங்கப்படவுள்ளன.

7. அனைத்து வகுப்புக்களுக்குமான நேரசூசி வகுப்பாசிரியர்களால் அனுப்பிவைக்கப்படும்.

8. ஒவ்வொரு பாடங்களுக்காக வழங்கப்பட்டிருக்கும் Assignment களை உரிய நேரத்தில் விரிவுரையாளர்களுக்கு மாணவர்கள் LMS வாயிலாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதால் மாணவர்கள் இன்ஷா அல்லாஹ் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ள வகுப்புகளில் முனைப்போடும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டும் கலந்துகொள்ளவேண்டும் என்று நிர்வாகம் மிக கண்டிப்பாக வேண்டிக் கொள்கிறது.

மேலதிக விபரங்களை மாணவர்கள் தத்தமது வகுப்பாசிரியர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

தற்போது உருவாகியிருக்கும் அசாதாரண சூழ்நிலையில் பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தல் தொழிற்பாடுகளை முறையாக மேற்கொண்டு வருவதனால் அசௌகரியமான சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு ஜாமிஆ மாணவர்களும் தமது நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் இது விடயமாக நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பை அவர்கள் நல்க வேண்டும் என்றும் அது மீண்டும் வேண்டிக் கொள்கிறது.

எமது கற்றல் -கற்பித்தல் நடவடிக்கைகளில் அல்லாஹ் எமக்கு உதவியாக இருப்பானாக!

வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்,<br>
கல்விப் பிரிவு,<br>
ஜாமிஆ நளீமியா<br>
20.10.2020